RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் ‘கூடுகள்’ நாவலில் காணப்படும் கல்வி நிலை மற்றும் கல்விச் சூழல்

**வெ. மணிகண்டன் [அ, *], சு. சுசா [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Educational condition and Educational Environment in Rajam Krishnan’s ‘Koodugal’

**V. Manikandan [a, *], S. Susa [a]**

[a] PG Tamil & Research Department of Tamil, Chellammal Women’s College, Guindy, Chennai-600032, Tamilnadu, India.

* Corresponding Author:
mani1023501@gmail.com

Received: 16-12-2025
Revised: 21-02-2026
Accepted: 03-03-2026
Published: 15-03-2026

Check for updates

**ABSTRACT**

In this article, I have aimed to demonstrate that Rajam Krishnan has proven, it is possible to write a novel centred around an educational institution. Moreover, the significant issues and challenges within the education sector and institutions are revealed through this 1974 novel, “Koodugal”. The novel highlights that ‘money’ is the basis of education, the goal of life, the ideal of education, and the goal of a position at schools has become donation. Power and arrogance are all rooted in this very foundation. The novel portrays the 1970s as a period of transformation, with improvements in student-school relationships, universal access to education, girls’ education, and widespread availability of schools. It also notes the eradication of discriminatory practices, such as separate seating arrangements for backward classes, fostering an environment of equality within school premises.

**Keywords:** Rajam Krishnan, Koodugal, Educational Reforms, Anti-Hindi Agitation, Status of Women Teachers, Free Education and Mid-day Meals, Commercialization of Education

## முன்னுரை

“கூடுகள்” என்ற புதினத்தின் தலைப்பிற்கேற்ப ஒரு தாய்ப்பறவை எப்படி தன் குஞ்சுகள் உள்ள கூடுகளை பொத்திப்பொத்திப் பாதுகாக்குமோ, அதேபோல மாணவர்களுக்குக் கூடுகள் போல் உள்ள சீனிவாசபுரம் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தை அரசு எடுத்து நடத்தக் கூடாது என்பதற்காவும், அப்பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்களின் கல்வியையும், எதிர்காலத்தையும் காக்கவும் பாடுபடும் புதினத்தின் முக்கியக் கதாபாத்திரங்களில் ஒருவராக கனகா என்ற பாத்திரத்தைப் படைத்துள்ளார் ராஜம் கிருஷ்ணன். அதுமட்டுமின்றி 1970 காலகட்டத்தில் நிலவிய பல கல்வி தொடர்பான பிரச்சினைகளையும் ஆசிரியர் இப்புதினத்தில் விவரித்துள்ளார்.

## கூடுகள்

"பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர் என்ற உறவுத்தொடர்பு எனக்குப் புறம்பான செய்தியல்ல. நான் உலகில் கண் விழித்துக் கண்ட முதல் வாழ்வே பள்ளியுடன் தொடர்புகொண்ட வாழ்க்கை தான். எல்லாத் தந்தையரும் ஸ்கூலுக்கும், தாயார் அடுப்பங்கரைக்கும் உரியவர்கள் என்ற கருத்து வினாத் தெரியாத என் நெஞ்சில் இடம் பெற்றதுண்டு. ஏனெனில் என் தந்தையார் ஒரு பள்ளி ஆசிரியர்" (ப.16, இந்திய இலக்கியச் சிற்பிகள்) என்று ராஜம் கிருஷ்ணன் கூறுவதன்மூலம், அவரது

வாசிப்புக்கு அடித்தளமிட்டவர் அவரது தந்தை என்பதையும், அந்த வாசிப்பே பின்னாளில் அவரது எழுத்துப் பணி செம்மையாகவும், நேர்த்தியாகவும் அமையக் காரணமாக அமைந்தது என்பதையும் அறிய முடிகிறது.

## கல்விச் சீர்திருத்தம்

பள்ளிக் குழந்தைகள் அறிவியலில் அதிகமாக நாட்டம் கொண்டிருக்கின்றனர். ஆனால் வீட்டுப் பாடம் செய்வதில் ஆர்வம் இல்லாமல் இருக்கின்றனர். இன்றைய சூழலில் கல்விப் பயிற்சிக்காகக் கற்ற முறைகளையே நேர்மாறாக நினைத்துக் கையாளும் அவசியத்தை வற்புறுத்துகிறது.

“உயர் வகுப்புகளில் நிலைமை வேறு. அந்த வகுப்புகளில் மாணவரை அடித்தால், திரும்பி ஆசிரியர் அடிபடுவார்”(ப.61,**கூடுகள்**) என்ற நிலை இன்று முழுவதுமாக மாறி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அன்பின் வழியில் பாடத்தையும் ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டிய சூழல் உள்ளது. அதுமட்டுமின்றி மாணவர்களை ஆசிரியர்கள் அடிப்பது சட்டப்படி குற்றமாகும். கற்பிக்கும் ஆசான் தெய்வம் என்ற நிலை மாறி, மாணவர்களைக் கேட்டுக் கொண்டு மாணவர்கள் விருப்பப்படி பாடம் நடத்த வேண்டிய நிலைக்கு இன்றைய கல்விச் சூழலில் ஆசிரியர் பணி மாறியுள்ளது.

## இந்தி எதிர்ப்பு

தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்த்து 1937-ல் தொடங்கி பல்வேறு காலகட்டங்களில், குறிப்பாக 1965-ல், மிகப்பெரிய மக்கள் மற்றும் மாணவர் போராட்டங்கள் நடைபெற்றன. தந்தை பெரியார், சி.என்.அண்ணாதுரை போன்ற தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டங்கள் மொழி உரிமை, தமிழைக்காத்தல் மற்றும் மாநில சுயாட்சிக்கு முக்கியத்துவம் அளித்தன. இப்போராட்டங்களின் விளைவாக இந்தி கட்டாயமாக்கப்படுமென்ற ஒன்றிய அரசின் கொள்கை கைவிடப்பட்டது.

“இந்தி எதிர்ப்புக் களேபரத்தில் கூட இந்தப் பையன்கள் பங்கெடுக்கவில்லை. அப்போதைய தலைமையாசிரியர் மிகுந்த எச்சரிக்கையுடையவர். கொஞ்சம் தொந்தரவு வருமுன்பே பள்ளியைச் சாத்திவிடுவார். “படிச்சுக் கிழிக்க வேண்டாம்!” என்பார். மிஷன் பள்ளி மாணவர்கள் கூட ஊர்வலம் வந்தனராம். வரதராஜன் வேடிக்கையாக,”எதற்கு ஊர்வலம் போறீங்க, இந்தியைத் தான் எடுத்திட்டாங்களே”என்று கேட்டானாம்”(**மேலது**,ப.101) என்ற வரிகளின் மூலம் புதினத்தில் குறிப்பிடப்படும் சீனிவாசபுரத்துப் பள்ளிக்கூடம் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவில்லை என்பதையும், மிஷன் பள்ளி மாணவர்கள் சமூக அக்கறையுடன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

## பெண் ஆசிரியர்களின் நிலை

ஆசிரியப் பணிகளில் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களை உயர் வகுப்புகளுக்குப் பாடம் எடுக்கும் ஆசிரியர்கள் மதிப்பது என்பது இன்றளவும் நிகழ்வது இல்லை. உயர் வகுப்புகளுக்குக் கணிதம், அறிவியல் பாடம் எடுக்கும் ஆண் ஆசிரியர்கள், உடற்கல்வி பெண் ஆசிரியர்களுக்கும் இசை பயிற்றுவிக்கும் பெண் ஆசிரியர்க**ளுக்கும்** துளியளவும் மரியாதை தருவது இல்லை. பெண் ஆசிரியர்களின் நிலையை எடுத்துரைக்கும் விதமாக “சுகுணா டீச்சரும், மிஸஸ் சர்மாவும் இந்த ஸ்கூலை ஏதோ அடி மட்டமாக நினைக்கிறாங்க; இங்கே கற்பிக்க வருவதே தங்கள் போதாத காலம் என்று மிதமிதப்போடு நடிக்கிறாங்க. அதோடு, நான் சொல்லக் கூடாது- பள்ளிக் கூடத்தில் கற்பிக்க வரும் பெண் ஆசிரியைகள் இன்னும் கொஞ்சம் அடக்கம் பயின்றால்- அலங்காரங்களைக் குறைத்துக் கொண்டால் நலமாக இருக்கும்”(**மேலது**,ப.94) என்று, பள்ளிக்கூடங்களில் கற்பிக்க வரும் பெண் ஆசிரியர்களின் கல்வித் தகுதிக்கு மதிப்பளிக்காமல், பெண் ஆசிரியர் என்றால் அடக்கமாக இருக்க வேண்டும், ஆண் ஆசிரியர்களை எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது, அலங்காரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும், ஆடையில் கட்டுப்பாடு அவசியம் என ஆணாதிக்கப் பிற்போக்குச் சிந்தனைகள் கல்வி நிலையங்களில் நிலவுவதை ராஜம் கிருஷ்ணன் அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

## இலவச கல்வியும்,மதிய உணவும்

இந்தியாவில் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் (**RTE - 2009**) மூலம் கல்வி அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு, அரசுப் பள்ளிகளில் இலவசப் பாடப்புத்தகங்கள், மற்றும் மதிய உணவு உள்ளிட்டவற்றை உறுதிசெய்கிறது.

“ஃப்ரீ எஜீகேஷன்’ என்ற பெரிய கைகளை அரசாங்கம் நீட்டி, பட்டி தொட்டி, குப்பை மேட்டுக் குச்சு, சாக்கடை ஓரத்துக் குடிசைகள் ஆகிய எல்லா இடங்களிலிருந்தும் பிஞ்சுகளும், பொடிசுகளும்,

இளவட்டங்களும் கல்வியறிவு பெற வேண்டும் என்று அணைத்து வாரிக் கூடுகளில் அடைக்கிறது. பசியினால் ஓடிப்போய் விடக்கூடாதென்று மஞ்சள் வண்டியில் வாளி வாளியாகப் பொங்கலை நிரப்பி கொண்டு வந்து கொடுக்கிறது"( **மேலது**,ப.95) என்று இலவச கல்வியையும் மதிய உணவுத் திட்டத்தையும் பற்றி ஆசிரியர் உரைக்கிறார்.

## முடிவுரை

இப்புதினத்தில் ஆசிரியர் குறிப்பிட்டுப் பேசும் சிக்கல்கள் இன்றளவும் கல்வித்துறையில் உள்ளன. ஆசிரியர் மாணவர் இடையிலான உறவு பலவீனம் அடைந்துள்ளது; பல தனியார் பள்ளிகள் குறைந்த சம்பளத்தில் ஆசிரியர்களை அடிமைகள் போல நடத்துகின்றனர்; கல்வி வியாபாரம் ஆக்கப்பட்டுவிட்டது. பள்ளிக்கூடத்தை மையமாகக்கொண்டு ராஜம் கிருஷ்ணன் எழுதிய கூடுகள் புதினம் கல்வித்துறையில் நாம் சரி செய்ய வேண்டியவற்றை அழகாக எடுத்துரைக்கிறது.

### References

தோதாத்ரி, எஸ்., (2017) இந்திய இலக்கியச் சிற்பிகள்- ராஜம் கிருஷ்ணன், சாகித்ய அகாதெமி, முதல் பதிப்பு.

நடராசன் தி.சு., (2009) திறனாய்வுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஒன்பதாம் பதிப்பு.

ராஜம் கிருஷ்ணன், (2021) கூடுகள், நாம் தமிழர் பதிப்பகம், ஆறாம் பதிப்பு.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 20xx. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License